திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக

# 8ஆம் ஆண்டை தொடங்கி இருக்கும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு வாழ்த்து!

## விவசாயிகள் - தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை!



சென்னை, ஆக. 31 -

சமூக நீதியை தமிழ் மண்ணில் கட்டி காத்து அதனை உலக அளவிற்கு கொண்டு சென்ற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக 8 ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறது.

பெரியாரின் சிந்தனைகளை உள்ளடக்கி, சமூகநீதி, மாநில சுயாட்சி, சுயமரியாதை, மொழி, இன பாதுகாப்பு போன்ற உயர்ந்த இலட்சியங்களுக்காக தொடங்கப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர்களான அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோர் வழியில் அந்த கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்று 7 ஆண்டுகள் மிகச் சிறப்பாக பணியாற்றி தொடர் வெற்றிகளை குவித்தவர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள். ஆட்சியிலும், கட்சியிலும் முதல்வர் மற்றும் தலைவர் பதவிகளில் உலகம் திரும்பி பார்க்கக் கூடிய வகையில் அவருடைய செயல் திட்டங்கள் அமைந்திருந்தன.

தலைவர் கலைஞருக்கு பிறகு திராவிட முன்னேற்ற கழகம் முடிந்துவிடும் என எதிரிகள் எண்ணி கனவு கண்டிருந்த நிலையில் அவற்றை தவிடு பொடியாக்கி இன்றைக்கு இந்தியத் தலைவர்கள் வரிசையில் தலைசிறந்த இடத்தை தன்னுடைய செயலால் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் பெற்றுள்ளார்.

தலைவர் கலைஞர் அவர்களின் மறைவிற்கு பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தலைவராகப் பொறுப்பேற்ற போது இவரால் கலைஞரைப் போல் செயல்பட முடியாது. இவருக்கு முதலமைச்சராகும் வாய்ப்பு இல்லை என்றெல்லாம் விமர்சனம் செய்து வந்தார்கள். கட்சிப் பொறுப்பை ஏற்ற தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் தான் தலைவராக இருந்த பொழுது நடைபெற்ற அனைத்துத் தேர்தலிலும் மகத்தான வெற்றி பெற்று எதிரிகளை களத்திலும் எண்ணத்திலும் தோற்கடித்தார்.

முதலமைச்சராகும் வாய்ப்பில்லை என்று கூறி வந்தவர்கள் இவர் முதலமைச்சரான போது இவரால் தலைவர் கலைஞரைப் போன்று ஆட்சி நடத்த முடியாது என்று விமர்சனம் செய்தார்கள். ஆனால் தாய் 8 அடி என்றால் குட்டி 16 அடி என்பது போல அவருடைய செயல்களால் தந்தையும் மிஞ்சிய மகனாக தளபதி அவர்கள் தன்னுடைய செயலால் உயர்ந்து நிற்கிறார். தலைவர் கலைஞர் இருந்திருந்தால் தளபதியை உச்சி மோர்ந்து பாராட்டியிருப்பார்.

ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின் அவர் நடைமுறைப்படுத்திய பல்வேறு திட்டங்கள் குறிப்பாக மகளிருக்கான உரிமைத் திட்டம், உயர்க்கல்வி பயில்வதற்கான உதவித் திட்டம், காலை உணவு திட்டம், இல்லம் தேடி கல்வி, மக்களை தேடி மருத்துவம் போன்ற எண்ணற்ற திட்டங்களால் இந்தியா மட்டுமல்ல உலக அளவில் அவர் பாராட்டு பெற்று உயர்ந்து இருக்கிறார். காலை உணவு திட்டத்தை இந்தியாவில் உள்ள மாநிலங்கள் மட்டுமல்ல கடல் கடந்து கனடாவிலும் அது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

இப்படி ஆட்சியில் ஒரு முன்மாதிரி முதலமைச்சராக இன்றைக்கு தளபதி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விளங்குகிறார். கட்சியை கட்டுக்கோப்புடன் வைத்திருக்கும் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் கூட்டணியையும் சிதையாமல் தொடர்ந்து தட்டி காத்து வருகிறார். இப்படி கட்சியிலும் ஆட்சியிலும் தனி முத்திரைப் பதித்து வரும் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக 8ஆம் ஆண்டில் அடியெடுத்து வைக்கிறார்.

அவருடைய பணிகள் தொடர்ந்திட விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சி உள்ளார்ந்த வாழ்த்துக்களை உரித்தாக்குகிறது என்று பொன். குமார் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

# திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லியில் மாபெரும் வேலைவாய்ப்பு முகாம்!

## அமைச்சர்கள் ஆவடி சா.மு.நாசர், சி.வி.கணேசன் பணி நியமன ஆணைகளை வழங்கினர்!

திருவள்ளூர் ஆக 31; திருவள்ளூர் மாவட்டம், பூவிருந்தவல்லி வட்டம் அறிஞர் அண்ணா அரசு ஆண்கள் மேல் நிலைப் பள்ளியில் திருவள்ளூர் மாவட்ட நிர்வாகம் மற்றும் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில் நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெற்றது. இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் வேலை வாய்ப்பு முகாமை தொடங்கி வைத்து பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

இம்முகாமில் திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்களை சேர்ந்த 210க்கும் மேற்பட்ட தனியார் நிறுவனங்கள் கலந்து கொண்டு தங்களுக்கு தேவையான வேலைநாடுநர்களை தேர்வு செய்தனர். இம்முகாமில் 8ஆம் வகுப்பு, 10ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்பு, பட்டப்படிப்பு, ஐடிஐ மற்றும் டிப்ளமோ, பொறியியல், நர்சிங் படித்தவர்கள் பங்கேற்றனர். கலந்துக் கொண்ட வேலை நாடுநர்களின் எண்ணிக்கை 2058, அதில் 56 மாற்றுத்திறனாளிகளும் அடங்குவர், ஆண் பணி நாடுநர்களின் எண்ணிக்கை 921, பெண் வேலை நாடுநர்களின் எண்ணிக்கை 1137.

பணி நியமன ஆணை பெற்றவர்கள் 504, அதில் 31 மாற்றுத்திறனாளிகள் அடங்குவர், பணி நியமன ஆணை பெற்ற ஆண்கள் 274 பணி நியமன ஆணைபெற்ற பெண்கள் - 230. அடுத்த கட்ட நேர்காணல் சுற்றுக்கு தகுதி பெற்ற ஆண்கள் 166, பெண்கள் 165, மொத்தம். 331. திறன் பயிற்சி வழங்கும் நிறுவனங்களின் எண்ணிக்கை: 5 திறன் பயிற்சிக்காக பதிவு செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை: 23 முன்னதாக மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் மாண்புமிகு தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் அவர்கள் ஆகியோர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் வேலை வாய்ப்பு நிறுவனங்களின் பல்வேறு அரங்க கூடங்களை பார்வையிட்டு நேர்காணல் காண்பவர்களிடம் கலந்துரையாடினர்.

இம்முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ் ராஜ், நகர செயலாளர் ஜி. ஆர்.திருமலை, நகர்மன்றத் தலைவர் காஞ்சனாசுதாகர், நகர மன்ற துணை தலைவர் க.ஸ்ரீதர், மண்டல இணை இயக்குநர் இர.தேவேந்திரன், உதவி இயக்குநர் விஜயா, திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் ரவிச்சந்திரன் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் ஆகியோர் உள்ளனர்.





மாதவரம் வடக்கு பகுதி 16வது வட்டம் ஆண்டார்குப்பம் பகுதியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு வரும் அங்கன்வாடி மற்றும் சத்துணவு மையத்தை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் நேரில் சென்று ஆய்வு செய்து அங்கன்வாடி மற்றும் சத்துணவு மைய ஊழியர்களிடம் தேவைகளை கேட்டறிந்தார். 16வது வட்டச் செயலாளர் இ. கண்ணப்பன், கடப்பாக்கம் என். மகேஷ்குமார்,பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எலந்தனூர் வி. சிவப்பிரகாஷ், மணலி புது நகர் சி. எம் .ராஜா, கடப்பாக்கம் சாம்ராஜ் மற்றும் நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். சேகர்

**ஆகஸ்ட் 31 (2020)**



தனது இளமைக் காலத்திலேயே கழகப் பணியாற்ற தொடங்கியவர்.

வட்டச் செயலாளர், மாவட்ட பிரதிநிதி, நகர இளைஞர் அணி அமைப்பாளர், மூன்று முறை குமாரபாளையம் நகரச் செயலாளர், மாவட்ட துணைச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.

குமாரபாளையம் நகர்மன்ற உறுப்பினராக இரண்டு முறையும், 2006ல் நகர்மன்றத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# விட்டு விடாதீர்கள்... இறுகப் பற்றிக்கொள்ளுங்கள்!



திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரை நூற்றாண்டுக்கு முன்பு முதன் முதலாக அரசியலில் அடி எடுத்து வைத்த காலத்தில் இருந்து, அவருக்கு எப்பொழுதுமே மிகச் சிறப்பான விமர்சகர்கள் உண்டு.

அரசியலுக்கு வந்தா வார்டுச் செயலாளர், வட்டச் செயலாளர்னு போக வேண்டியது தானே..?! அதென்ன புதுசா இளைஞர் தி.மு.க..?!

பத்துப் பதினைஞ்சு... வயசுப் பசங்களை கூட்டி வசசிக்கிட்டு ஊர் ஊருக்கு போய் கொள்கை விளக்க நாடகம் போட்டா ஆச்சா?! அதான் கொள்கைகளை எல்லாம் விளக்கி ஆட்சிக்கே வந்தாச்சே... அதுக்கப்புறம் இவர் என்ன கிழிக்கப் போறார்..?! என்றார்கள்..!

அவர் எதையோ ஒன்றை கிழித்ததால் தான் அன்றைக்கு இந்தியாவின் பெரும் தலைவர்களை எல்லாம் கைது செய்த அரச பயங்கரவாதச் சட்டம் மிசா.... இவரையும் கைது செய்தது..!

சரி... கட்சிக்கு ஆதரவா நாடகம் போட்டு மக்களை ஈர்த்தார், அப்புறம் கொஞ்சம் இளைஞர்கள் இவர் பின்னால சுத்தறாங்க... அதுனால இவரை கைது செய்தார்கள்...

அதுக்காக இளைஞரணின்னு ஒன்னை உருவாக்கி, அதுல ஐந்து முக்கியஸ்தர்களில் ஒருத்தரா இவரை நியமிக்கிற அளவுக்கு ஒர்த்தா..?!

கொஞ்ச நாள் கழிச்சு.....

நல்லா செயல்படுறாரு தான்... ஊர் ஊரா சுத்தி வர்றாரு தான்... நிறைய இளைஞர்கள் இவர் பின்னால் அணி வகுக்கின்றார்கள் தான்... அதுக்காக இவரையே அந்த அணிக்கு தலைவரா நியமிக்கிறதா? என்ன சார் நியாயம்...!? வைகோ மாதிரி பல மிக்க இளம் தலைவர்கள் எல்லாம் இதுனால கடுப்பாவுறாங்களே!?

ஒக்கே.. ஒத்துக்கறோம்ங்க... 93லவைகோ பிரிஞ்சுபோன, திமுகவே சரி பாதியா பிளவு பட்டுச்சின்னு அத்தனை ஊடகங்களும் எழுதி பொது மக்களும் நம்பிய நிலையில், 96 தேர்தல்ல தி.மு.க. வென்றதற்கு இவரது இளைஞர் அணியின் பங்களிப்பு தான் அடித்தளம் என்பதை ஒத்துக்கறோம்...

அதுக்காக சென்னை மாநகர மேயர் வேட்பாளரா இவரை நிப்பாட்டுறது எல்லாம் ரொம்ப ஓவர். முன்னாடி மாதிரி கவுன்சிலர் எல்லாம் தேர்ந்தெடுக்கறதா இருந்தா ஓகே... இவங்க அப்பா சொல்றதுக்காக ஓட்டுப் போட்டுடுவாங்க... ஆனா இப்ப மக்களே ஓட்டு போட்டுல்ல மேயரா வனும்... அதுக்கெல்லாம் ஒரு இமேஜ் வேணாமா?! அதெல்லாம் இவருக்கு இருக்கா..?!

ஒகேப்பா ஒத்துக்கறோம்... குறிஞ்சி மலர் டீவி சீரியல்ல நடிச்சி நல்ல பேரு வாங்கிட்டாரு. பார்க்கறதுக்கும் நல்ல கலரா, சுருள் முடியோட ஃபேரா இருக்காரு... அதனால மக்கள் ஓட்டு போட்டு மேயராக்கிட்டாங்க..! ஆனா சென்னை மாதிரியான ஒரு மாநகரத்தை அதிலும் இந்தியாவிலேயே முக்கியமான மாநகரத்தை நிர்வகிக்கிறது எல்லாம் சின்ன விஷயமா..?! குருவி தலை பனங்காய வைக்கிற மாதிரி செஞ்சிருக்கீங்க...!

யோவ்... சென்னைங்கறது ஒரு சின்ன ஏரியாய்யா... அதுல சிறப்பா நிர்வாகம் பண்ணி அதுல மக்கள் கிட்ட நல்ல பேரு வாங்கினா தமிழ்நாட்டுக்கே அமைச்சரா ஆக்கிடுவீங்களா..?! அதுக்கெல்லாம் எவ்ளோ அனுபவம் வேணும்... பொறுமைவேணும்... பதைரப்பட்ட மக்கள் பற்றிய புரிதல் வேணும்ன்னு எல்லாம் தெரியுமா..?!

ஆமாய்யா ஒத்துக்கறோம்... அமைச்சர் பதவிய சூப்பரா ஹேண்டில் பண்ணியிருக்காரு தான்... அதிகாரிகள் அத்தனை பேரையும் சும்மா முடுக்கிவிட்டு செம்மையா வேலை வாங்கியிருக்காரு தான்... ஒத்த ரூபா கூட ஊழல் நடக்காம செயல்படடிருக்காரு தான்... உள்ளாட்சி துறை மூலமா தமிழக கிராமங்களின் முகத்தையே மாற்றிக் காட்டியிருக்காரு தான்...



**சௌமியன் வைத்தியநாதன்**
மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர்

அதுக்காக துணை முதல்வரா ஆக்குறது எல்லாம் ரொம்ப ஓவருங்..! கட்சியில பொருளாளர் பொறுப்பு வேறயா..?!

என்னய்யா நடக்குது இங்க..?! இளைஞரணிய ஆரம்பிச்சாரு, சிறப்பா செஞ்சாரு, எம்.எல்.ஏ.வா ஆனாரு, மேயரா செயல்பட்டாரு, அமைச்சரா நிரூபிச்சிட்டாரு, கட்சி பொருளாளராவும் இருக்காரு... அதுக்காக தலைவருக்கு கொஞ்சம் முடியலன்னா இவரை செயல் தலைவரா ஆக்கிடுவீங்களா..?! அது என்ன அரசுப் பொறுப்பா... யாரு வேணாலும் செய்யறதுக்கு..?!

சரி... சரி... எல்லாத்தையும் ஒத்துக்கறோம்... எல்லாத்தையும் நல்லா செஞ்சாரு தான்... ஆனா இது வரைக்கும் கலைஞர் இருந்தாரு.... அவர் வழி காட்டுதல்ல அத்தனையையும் செய்தாரு..! அதனால் வெற்றி பெற முடிஞ்சது. ஆனா கலைஞர் அருகில் இல்லாத ஸ்டாலினை நம்பி இவ்ளோ பெரிய கட்சியோட தலைவர் பொறுப்பை கொடுக்கறது எல்லாம் இமாலய ரிஸ்க்..!

தனிச்சு எல்லாம் இவரால செயல்பட முடியாது. கட்சியை காப்பாற்ற நிறைய பொறுமை வேணும், நிதானம் வேண்டும், சகிப்புத் தன்மை வேண்டும், புத்தி கூர்மை வேண்டும், அரசியல் ராஜ தந்திரம் வேண்டும்...

இதையெல்லாம் யாராவது பக்கத்துல இருக்குறவங்க சொல்லிக் கொடுத்தாலும்... எல்லாத்துக்கும் மேல, இவருக்கு கட்சியோட அடிப்படை கொள்கைகள் மீது பிடிப்பும் பற்றும் அது பற்றிய புரிதலும் இருக்க வேண்டும்.

எங்களுக்கு என்னவோ, இவருக்கு திராவிட இயக்க கொள்கைகள் மீது எல்லாம் அவ்ளோ நம்பிக்கை இல்லைன்னே தோணுது..! தி.மு.க.வின் அடித்தளமே அஸ்திவாரமே... சமூகநீதி, சமத்துவம், சுயமரியாதை... இவை அனைத்தையும் நமக்கு நிரந்தரமாக பெற்றுத் தரக்கூடிய மாநில சுயாட்சி..!

கலைஞர் இதிலெல்லாம் ரொம்ப ஸ்ட்ராங்...! அதனால தான் எத்தனை இந்திரா காந்தி, ராஜீவ் காந்தி, எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா வந்தாலும் அவரை மட்டுமல்ல இந்த இயக்கத்தையும் ஒண்ணும் பண்ண முடியல...!

இவர் நல்ல நிர்வாகி தான், நேர்மையானவர் தான், ஊழல் கறை படியாதவர்தான், மக்களோடு மக்களாக நிற்பவர் தான், கடும் உழைப்பாளி தான்....

இப்படி ஒரு ஐ.ஏ.எஸ். ஆஃபீஸர் கிடைத்தால் நன்றாகத் தான் இருக்கும். கட்சித் தலைவராக இருந்து செயல்படக் கொள்கை முக்கியம். அதில் முழுமையான பிடிப்பும், உறுதியும் முக்கியம். அது இல்லன்னா மூணே மாசத்துல கட்சி சிதறிடும். லோ இவரை கட்சித் தலைவராக்குவது ரொம்ப ரிஸ்க்..!

ஒத்துக்கறோம்... ஒரு வருஷமா கட்சியை கட்டுக்கோப்போட நடத்துறாரு... இன்னும் பலப்படுத்தியிருக்காரு... ஒரு பொதுத் தேர்தலை சந்தித்து வரலாற்றுச் சிறப்பு மிக்க வெற்றியை ஈட்டியிருக்காரு... தி.மு.க.வுக்கு இதுவரை கிட்டியிராத மக்கள் செல்வாக்கினை தேர்தலில் உறுதி செய்திருக்கிறார்... மனதார ஏற்றுக்கொள்கிறோம்....

ஆனால் இது இக்கட்டான கால கட்டம், தி.மு.கழகம் துவங்கிய பொழுது காலங்கள் எப்படி இருந்தனவோ அதே போன்றதொரு சூழல் இப்பொழுது உருவாகியுள்ளது. கடந்த எழுபது ஆண்டுகளில் தி.மு.க. போராடிப் போராடி சிறிது சிறிதாக பெற்றிருக்கும் சமூக நீதி, கொஞ்சம் கொஞ்சம் சுயமரியாதை, சமத்துவம் எல்லாம் இன்றைக்கு மீண்டும் பறிபோகும் சூழல் உருவாகியுள்ளது. அத்தகைய முழு சனாதன ஆட்சி மத்தியில் மிருக பலத்தோடு அமைந்துள்ளது.

இப்பொழுது தான் தி.மு.க. இந்தியாவுக்கான கட்சியாக பரிமளிக்க வேண்டும். அண்ணா, கலைஞர், பேராசிரியர், நெடுஞ்செழியன், மதியழகன், ஈ.வி.கே. சம்பத் போன்ற எண்ணற்ற தி.மு.கழக ஆளுமைகளின் முழு வலுவோடு தி.மு.க. தலைவர் போராட வேண்டிய தருணமிது..! செய்வாரா உங்கள் ஸ்டாலின்?! முடியுமா உங்கள் தளபதியால்...?!

தலைவராகப் பொறுப்பேற்று ஏழு ஆண்டுகளை நிறைவு செய்து விட்டார்... எட்டாவது ஆண்டிலும் காலடி வைத்து விட்டார்... சட்டமன்றத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையோடு கழகத்தை ஆட்சியில் அமர வைத்துவிட்டார்... இரண்டாவது முறையாக நாடாளுமன்றத் தேர்தலில் 100 சதவிகித வெற்றியை கழக கூட்டணிக்கு ஈட்டித்தந்து விட்டார்...

நான்காண்டுகால திராவிட மாடல் ஆட்சியை இந்திய மாநிலங்களுக்கு மட்டுமல்லாமல், உலகிற்கே முன்னோடி திட்டங்களை செயல்படுத்தி ஆச்சர்யம் காட்டுகிறார்..! நேற்று கூட பீகார் சென்று அகில இந்திய தலைவர்களான ராகுல் காந்தி உள்ளிட்டோருடன் மாபெரும் பேரணியில் பங்கேற்று தமிழில் பேசி அதை இந்தியில் மொழிபெயர்க்க... பீகார் மக்களை கூஸ்பம்ப்ஸ் கொண்டாட்ட நிலைக்கு கொண்டு சென்றார்...

அகில இந்திய ஊடகங்களில் அந்தப் பேரணியை பேசு பொருளாக்கிவிட்டார்... அவா வர்க்கமும், சங்கி வர்க்கமும் ஆஹா இவர் சாமி கும்பிட மாட்டார். இவர் இந்து பண்டிகைகளுக்கு வாழ்த்துச் சொல்லமாட்டார் என்று இவர்களுக்கெல்லாம் பீகார் மக்கள் ஃபயர் விடலாமா என்று கூகுரலிட்டும், அழுது புலம்பியும், சென்டிமெண்ட்டாகப் பேசியும் வட இந்திய ஊடகங்களை அனல்பறக்க வைக்கின்றனர். சித்தாந்த எதிரிகளை அலறவிட்டுவிட்டு... இன்றைக்கு திராவிட இயக்கத்தின் நான்காம் தலைமுறை தலைவராக... கம்பீரமாக எட்டாம் ஆண்டில் காலடி வைக்கின்றார்...!

மன்னித்து விடுங்கள் தி.மு.க .வினரே...! விட்டு விடாதீர்கள் அவரை... இறுகப் பற்றிக் கொள்ளுங்கள் அவர் கரங்களை..! உங்களை மட்டு மல்ல.... தமிழகத்தை மட்டுமல்ல... ஒட்டுமொத்த இந்தியாவையே காக்கக் கூடிய மாவீரன் அவர்...!

பா.ஜ.க.வுக்கு நேர் எதிரிகளாக செயல்படும் தேசிய கட்சிகளான காங்கிரஸும், கம்யூனிஸ்ட்டுகளும் கலகலத்துப் போய் நிற்கின்ற நிலையில்... இந்திய அரசியலில் பலமிக்க தலைவர்களாக அறியப்பட்ட மாயாவதி, முலாயம், லாலு, கெஜ்ரிவால், ஜெகன் மோகன் ரெட்டி, சந்திரபாபு நாயுடு, நிதிஷ் குமார், நவீன் பட்நாயக், சரத்பவார், மம்தா பானர்ஜி போன்றோர் எல்லாம்...

பொட்டிப் பாம்பாய் அடங்கியோ அல்லது பலவீனமான குரலிலோ மோடி அமித்ஷா இணையை கையாண்டு கொண்டிருக்க...

உங்களுக்கு எல்லாம் இரண்டு வாய்ப்புகள்... ஒன்று தாமரையை பற்றிக்கொள்ளுங்கள் அல்லது கை விலங்கினை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று அமித்ஷா சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்க....

இந்தியா முழுவதும் பாய்ச்சப்போகின்ற ஒரு சர்வாதிகார அடக்குமுறையை.... ஒரு சோதனை எலி போன்று ஜம்மு காஷ்மீர் பகுதியில் பரிசோதித்து விட்டு... அதன் எதிர்வினைகள் எப்படி இருக்கின்றது என்று பார்த்துக் கொண்டிருந்த மோடி அமித் இணைக்கு....

அன்றைக்கு டெல்லி ஜந்தர் மந்தரில் தி.மு.க. தலைமையில் 14 கட்சிகளை இணைத்து அதன் எம்.பி.க்களைக் கொண்டு ஆர்ப்பாட்டம் நடத்தி... பா.ஜ.க.வின் சோதனை முயற்சிக்கு கடும் எதிர்ப்பினை பதிவு செய்துள்ளார் உங்கள் திமுகழக தலைவர் மு.க.ஸ்டாலின்..!

இதைச் செய்வதனால் அவர் கைது செய்யப்படலாம். அவரது கட்சி தடை செய்யப்படலாம் என்றெல்லாம் மூன்று நாட்களாக கடுமையாக பரப்புரை செய்தனர். இந்த காரணத்திற்காக செய்ய முடியாவிட்டாலும்....

சி.பி.ஐ., அமலாக்கத்துறை என்று எத்தனையோ அரசுத் துறை இயந்திரங்களைக் கொண்டு அவரையோ அல்லது அவரைச் சார்ந்தவர்களையோ அல்லது கட்சியின் முக்கிய தலைவர்களையோ அல்லது சாதாரண தொண்டர்களையோ... அவமானப்படுத்தி, அல்லல்படுத்தி, அலைக்கழித்து, சிறைப்பிடித்து... சித்திரவதை கூட செய்யப்படலாம்...!

ஆனால் இது எதைப் பற்றியுமே கவலை கொள்ளாமல் நான் மட்டுமல்ல; என்னைச் சார்ந்தவர்களும் என் இயக்கத்தினரும் எதையும் சந்திக்கத் தயார் என்று உறுதியோடு...

இந்தியாவில் உண்மையான ஜனநாயகத்தை விரும்புகின்ற அத்தனை தலைவர்களுக்கும் அவரது நேர்மையை பீகார் பேரணியும், உரை வீச்சும்... ஒரு தன்னம்பிக்கையையும் தைரியத்தினையும் விதைத்திருக்கின்றது.

தி.மு.க..... பழைய தி.மு.க.வாக மாறி நிற்கின்றது...! அதை உங்கள் தலைவர் மு.க. ஸ்டாலின் சாதித்துக் காட்டியிருக்கின்றார்.

இப்பொழுது சொல்கிறோம்... உங்கள் தலைவர் முழுமையானவர்..!

விட்டு விடாதீர்கள் அவரை... இறுகப் பற்றிக் கொள்ளுங்கள் அவர் கரங்களை..!